செ.வெ.எண்: 71 நாள்:30.12.2017

பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் தாமிரபரணி ஆற்றுடன் நம்பியாறு மற்றும் கருமேணியாறு இணைக்கும் வெள்ளநீர் கால்வாய் திட்டம் 3ம் கட்ட பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை அவர்கள் முன்னிலையில் இன்று (30.12.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தின் வரட்சி பகுதிகளை வளப்படுத்தும் மிகச்சிறந்த திட்டம் மற்றும் இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்றுள்ள நிலையில் 3ம் கட்டமாக மூலக்கரைப்பட்டி முதல் நம்பியாறு அணை வரையில் பணிகள் தொடங்கிட நில எடுப்பு பணிகளை விரைந்துசெய்திட வேண்டும். 3ம் கட்ட பணிகளை வரும் மார்ச் மாதத்தில் தொடங்கும் வகையில் மூன்று சர்வேயர்கள் தலைமையில் ஒவ்வொரு குழுவிற்கும் 5 பணியாளர்களை கொண்டு குழு அமைத்து பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் இப்பணிகளை முடிக்க வேண்டும். இப்பணிகளில் சமந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், தனித்துணை ஆட்சியர் திரு.மகேஸ்வரன், பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் திரு.ஞானசேகர், உதவி செயற்பொறியாளர்கள் (வள்ளியூர்) திரு.அருணாசலம், (நாங்குநேரி) திரு.வேலையா, (திருநெல்வேலி) திரு.நாகராஜன், திரு.லிங்கம், (அம்பாசமுத்திரம்) திரு.விஜயராஜன், நதிநீர் இணைப்பு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருநெல்வேலி.